**O.S.No.46/2013**

**Date:10.09.2018**

பிரதிவாதி தரப்பு சாட்சி 1 - கணேசன், த-பெ.தங்கமுத்துப்பிள்ளை

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

2005ல் என் தகப்பனார் இறந்த போது, வாதி என்னிடம் வந்து கிரைய ஒப்பந்தம் இருப்பதாக தெரிவித்ததாக ஏற்கனவே தெரிவித்தது தவறு என்றால் தவறுதான். எப்போது வாதி கிரைய ஒப்பந்தம் பற்றி முதலில் கேட்டார் என்றால் 2011ல் வா.சா.ஆ.2ன்படியான வழக்கறிஞர் அறிவிப்பு வந்த மறுநாள் கேட்டார். வாதி என்னிடம் என்ன கேட்டார் என்றால் என் அப்பா பணம் வாங்கியுள்ளதாக கேட்டார். கிரைய ஒப்பந்தம் பற்றி கேட்டாரா என்றால் ஒப்பந்தம் கொண்டு வரச் சொன்னேன். கிரைய ஒப்பந்தம் பற்றி அவர் சொல்லவில்லை. நான் கிரைய ஒப்பந்தத்தை கொண்டு வரச் சொன்னதாக கேட்டேன் என்றால் அவர்கள் ஒப்பந்ததை என்னிடம் காண்பிக்கவில்லை. யார் பெயரில் உள்ள கிரய ஒப்பந்தம் என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. நான் கிரைய ஒப்பந்தம் எதுவும் இல்லை, பணம் வாங்கவில்லை என்று பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எவ்வளவு தொகை என் அப்பா வாங்கினார் என்று வாதியிடம் கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை. வாதியின் தாயார் வெள்ளையம்மாள் பெயரில் கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்து, பணம் கொடுத்துள்ளதாக என்னிடம் சொன்னார் என்றாலும், அதை நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. அவர் கேட்டதற்கு கிரைய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு, கால அவகாசம் கேட்டேன் என்றால் சரியல்ல. எந்த தேதியில் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்ற விபரத்தையாவது வாதியிடம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. அந்த கிரய ஒப்பந்த காலத்தில் தாவாச் சொத்தின் அனுபவத்தை வாதியிடம் ஒப்படைத்து விட்டதாக வாதி சொன்னாரா என்றால் இல்லை. வாதியின் அம்மா இறந்த பின்னர் அந்த சொத்தை வாதி அனுபவம் செய்து வருவதாகச் சொன்னாரா என்றால் இல்லை. தற்போது தாவாச் சொத்து யார் கைவசம் உள்ளது என்றால் வாதியானவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். எப்போது, யார் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் வாதியானவர் 2011 ஜுன் மாதம் ஆக்கிரமிப்பு செய்தார். என் எதிர்வழக்குரையில் தாவாச் சொத்தை ஆக்கிமிப்பு செய்துள்ளதாகச் சொல்லியுள்ளேனா என்றால் பார்த்தால்தான் தெரியும். எதிர்வழக்குரைக்கு யார் தகவல்

சொன்னது என்றால் நான்தான் சொன்னேன். எதிர்வழக்குரை சங்கதிகள் உண்மைதானா என்றால் உண்மைதான். ஆக்கிரமிப்பு செய்தது வழக்கறிஞர் அறிவிப்பிற்கு முன்னரா, பின்னரா என்றால் பின்னர்தான் ஆக்கிரமிப்பு செய்தார். வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எத்தனை நாள் கழித்து வாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் ஞாபகம் இல்லை. வாதியானவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்து நீதிமன்ற நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை, காவல் நிலையத்தில் மட்டும் புகார் கொடுத்தேன். காவல்துறை என்றால் என்ன என்று தெரியாது, நீதிமன்றம் என்றால் என்ன என்று தெரியாது. எப்போது காவல் துறையில் புகார் கொடுத்தேன் என்றால் 2011ல் புகார் கொடுத்தேன். தேதி ஞாபகம் இல்லை. புகார் கொடுத்தது வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்னரா, முன்னரா என்றால் ஞாபகம் இல்லை. அந்த புகார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் விசாரித்து, பேசி அனுப்பினார்கள். நான் புகார் கொடுத்ததற்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கை வாதி 2013ல் தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்னர் நான் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இதே வழக்கில் நான் எதிர்கோருரிமை மனு ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது என்பதால் தாக்கல் செய்யவில்லை, 1991லிருந்தே ஒப்பந்தப்படி வெள்ளையம்மாள் தாவாச் சொத்தை அனுபவித்து வந்தார் என்றாலும், அவர் இறந்த பின்னர் இந்த வாதி தாவாச் சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் இல்லை. அவர் தாவாச் சொத்திற்கு கிஸ்தி செலுத்தியுள்ளார் என்றால் தெரியாது. நான் எந்த காலத்திலாவது கிஸ்தி செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். யாரிடம் பணம் கொடுத்தேன் என்றால் என் அப்பாவிற்குத்தான் தெரியும். என் அப்பா 2005ல் இறந்த பின்னர் கிஸ்தி செலுத்தினேனா என்றால் நான் செலுத்தவில்லை. பட்டா என் பெயரில் மாற்றப்பட்டதா என்றால் மாற்றப்படவில்லை. தாவாச் சொத்தை யாருக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சண்முகம் என்பவருக்கு கிரையம் கொடுத்தேன். 2012ல் கிரையம் செய்து கொடுத்துள்ளேன். கிரையதாரரை விசாரிக்க உள்ளேனா என்றால் விசாரிப்போம். கிரைய ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் தெரியாது. கிரையம் செய்த போது, 8ம் பிரதிவாதிக்கு சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் ஒப்படைக்கப்பட்டு விட்டது. 2011ல் வாதி ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலையில், நான் 2012ல் 8ம் பிரதிவாதிக்கு சுவாதீனம் ஒப்படைத்ததாக கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல. கிரயத்திற்குப் பின்னர் தாவாச் சொத்துக்கு கிஸ்தி யார் செலுத்தி வருவது என்றால் தெரியாது. மொத்த

சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 28 செண்டு ஆகும். தாவாச் சொத்தில் 64 செண்டு தனியாக உட்பிரிவு ஆகியுள்ளதா என்றால் இல்லை. 8ம் பிரதிவாதியானவர் சொத்தின் அனுபவம் வாதியிடம் இருப்பது தெரிந்தேதான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் இல்லை. 2012ம் வருட கிரைய ஆவணமானது பெயரளவில் ஏற்பட்டது என்றால் இல்லை. தாவாச் சொத்தில் 2011லிருந்து வாதி இருந்து வரும் நிலையில், தாவாச் சொத்தின் அபிவிருத்திக்காக இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கடன் பெற்றுள்ளாரா என்றால் தெரியாது. நான் வாதி பலமுறை கிரையம் செய்து கொடுக்குமாறு கேட்டும், நான்தான் கால தாமதம் செய்து வந்துள்ளேன் என்றாலும், வாதியானவர் கிரையம் பதிந்து கொள்ள தயாராகவே இருந்துள்ளார் என்றாலும் சரியல்ல. கிரைய ஒப்பந்தப்படி ரூ.13,440-க்கு கிரையம் பேசப்பட்டு, வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்கு முன்பணம் கொடுத்தது போக பாக்கித் தொகையினை வெள்ளையம்மாளும், வாதியும் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. வாதி எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும்,கிரைய ஒப்பந்தப்படி அனுபவம் செய்த வருகிறார் என்றால் கிரைய ஒப்பந்தமே நடக்கவில்லை, எனவே அதன்படி அனுபவம் செய்து வருவதாக கூறுவது பொய்யானது ஆகும். கிரய ஒப்பந்தம் என் தவறினால்தான் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், வாதியின் மீது எந்த தவறும் கிடையாது என்றாலும் சரியல்ல. கிரைய ஒப்பந்தப்படி இருந்து வரும் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்வதற்கு எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தின் சங்கதிகள் மற்றும் வாதியின் அனுபவம் ஆகியவை நன்கு தெரிந்து கொண்டே, வழக்கிற்காக மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.